# எச்.ஐ.வி.

## சோதனைக்குச் செல்லுங்கள்!

*உங்கள் மீது அக்கறை கொள்ளுங்கள்.*
*மற்றவர்கள் மீது அக்கறை கொள்ளுங்கள்.*

Wawasan Kesihatan

KEMENTERIAN KESIHATAN MALAYSIA



## உங்களின்
## வாழ்க்கை முறை
## உங்களை ஆபத்துக்கு
## உள்ளாக்கினால்....

எய்ட்ஸ் ஒரு குணப்படுத்த முடியாத நோய். உடலின் நோய்த் தடுப்பு முறையை சீர்குலையச் செய்து மற்றும் பல நோய்கள் மற்றும் அபூர்வ புற்று நோய்களை ஏற்படச் செய்யும். எச்.ஐ.வி. கிருமிகளால் இது ஏற்படுத்தப் படுகிறது.

பாலியல் தொடர்பு அல்லது எச்.ஐ.வி. கிருமிகளால் பாதிப் புற்ற ஊசிகளுடன் ஊசி போட்டுக் கொள்வதன் மூலம் எச்ஐவி கிருமிகள் நமது ரத்தக் குழாய்களில் நுழைகின்றன. கள்ளங்கபடமற்ற பலர் ஆபத் துக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

## பாலியல் உறவு வழி எச்ஐவி பரப்பப்படுகிறது



உங்களுடைய பாலியல் நடவடிக்கைகளில் நீங்கள் விவேகமாக நடந்து கொள்ளாமல் இருந்திருந்தால் அல்லது நீங்கள் பாதுகாப்பற்ற உடலுறவு கொண்டிருந்தால், எச்ஐவி கிருமிகள் தொற்றிக் கொள்ளக் கூடிய அபாயத்துக்கு உங்களை நீங்கள் உள்ளாக்கி இருக்கிறீர்கள். நீங்கள் பாதிக்கப்படாமல் இருக்கிறீர்களா? உறுதியாகத் தெரிந்துகொள்ள ஒரே ஒரு வழி மட்டுமே இருக்கிறது. சோதனை செய்துகொள்ளுங்கள்.

## போதைப்பொருளை ஊசி மூலம் செலுத்துவதே மிகப் பெரிய ஆபத்தைக் கொண்டிருக்கிறது



ஊசி மூலம் போதைப்பொருளை செலுத்திக் கொள்பவர்கள் மற்றும் குறிப்பாக ஊசிகளைப் பகிர்ந்து கொள்பவர்களே எச்.ஐ.வி. நோயினால் அதிக ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். மற்றவர்களுக்கு நீங்கள் ஓர் ஆபத்து உண்டாக்குவதற்குமுன் சோதனை செய்து கொள்ளுங்கள். உங்களுடைய உயிர் மற்றும் அன்புக்குரியவர்களின் உயிரைப் பாதுகாக்க எச்ஐவி சோதனை முதல் படியாக இருக்கக்கூடும்.

## தாயிடமிருந்து குழந்தைக்கு எச்ஐவி கிருமி தொற்றிக் கொள்ளலாம்.



எச்.ஐ.வி. கிருமிகள் யாரையும் தொற்றிக் கொள்ள வாய்ப்பு உண்டு. நீங்கள் குடும்பம் ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டால், உங்கள் குழந்தை பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். எச்.ஐ.வி. சோதனை மட்டுமே உங்களுக்கு மன நிம்மதியைத் தரும். கள்ளங்கபடமற்ற உங்கள் குழந்தையைப் பற்றி எண்ணிப் பாருங்கள். சோதனைக்குச் செல்லுங்கள்!

# எச்.ஐ.வி. சோதனைக்குப் பயப்படத் தேவையில்லை

நீங்கள் ஆபத்துக்கு உள்ளாகி இருப்பதாக எண்ணினால், எச்.ஐ.வி. சோதனையை மேற்கொள்வதே பொறுப்பான ஒரு செயலாகும். மற்றும் எவ்வித தியாகமும் செய்ய வேண்டியதில்லை.

- இந்தச் சோதனை சுலபமாக கிடைக்கும் எளிமையானது மற்றும் வலி இல்லாதது.
- இது இரகசியமானது. யாருக்கும் தெரிய வேண்டிய அவசியமில்லை.
- அரசாங்க மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் இலவசமாக செய்து கொள்ளலாம்.



# ஒரு பொறுப்புள்ள குடிமகனாக திகழுங்கள்

உங்கள்

வாழ்க்கை முறையில்

எச்.ஐ.வி.

தொற்றிக்

கொள்ளக்கூடிய

ஆபத்துக்களை

உள்ளாக்கி இருந்தால்

சோதனையை

மேற்கொள்ளுங்கள்.

**மேல் விவரங்கள்:**

எச்.ஐ.வி. சோதனையைப் பற்றிய மேல் விவரங்களை நீங்கள் தெரிந்துகொள்ள விரும்பினால் அருகில் உள்ள மருத்துவமனை அல்லது கிளினிக்குடன் தொடர்புகொள்ளுங்கள்.

